ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2513/02 - 2026 නොවැම්බර් මස 02 වැනි සඳුදා - 2026.11.02

2513/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

பிரிவு 2 இன் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 மற்றும் பிரிவு 5 ன் கீழ், 2025 திசெம்பர் 31 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட 2469/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையின் 50 ஆவது விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள, இயைபு முறைக் (HS) குறியீடுகள் 1006.30.19 (பிற - பச்சை அரிசி) மற்றும் 1006.30.29 (பிற - புழுங்கல் அரிசி) ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்டிருந்த விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை, 2026 நவெம்பர் 03 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்குகிறேன்.

அநுர குமார திசாநாயக்க
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, நவெம்பர் 02.

EOG 11 - 0027

1A - PG 8133 - 428 (2026/11) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*